<u>சுருக்கம்</u>

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – திருவண்ணாமலை மாவட்டம் – ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியம் – பள்ளி சத்துணவு அமைப்பாளர் நியமனத்தில் இனசுழற்சி முறை பின்பற்றுவதிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி 2) துறை

அரசு ஆணை (டி) எண்.155 நாள்: 10.08.2007

படிக்கப்பட்டது:-

1) அரசாணை (நிலை) எண்.918/ சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்:03.11.1989.
2) அரசாணை (நிலை) எண்.33/ சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்: 05.02.1993.
3) சமூக நல இயக்குநர், சென்னை – 5 அவர்களின் ந.க.எண்.62169/06/சஉதி, நாள் 01.02.2007.

------

ஆணை:-

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர்கள் பணிநியமனத்தில் இனசுழற்சி முறை கடைப்பிடிக்க மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணை பத்தி 5(2) ல் ஆணை வெளியிடப்பட்டது. பின்னர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் தனியார் (சிறுபான்மையினர்) அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களுக்கு அமைப்பாளர் பணி நியமனம் செய்ய இனசுழற்சி முறையினை பின்பற்ற தேவையில்லையெனவும் மற்ற உதவி பெறும் பள்ளிகளில் மாவட்டத்தினை ஒட்டுமொத்தமாகக் கணக்கில் கொண்டு இனசுழற்சி முறையினை கடைப்பிடிக்க வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டது.

2) மேலே மூன்றில் படிக்கப்பட்ட சமூகநல இயக்குநரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியத்தில் அரசால் நிரப்பிட அறிவிக்கப்பட்ட 10 சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களுக்கு இனசுழற்சி முறையில் உள்ளூர் மற்றும் 3 கி.மீ. முதல் 10 கி.மீ. தொலைவு வரையிலான கிராமங்களிலிருந்து தகுதியான விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெறவில்லை என்றும், ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து மக்களும் மலைவாழ் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் அவர்களிடமிருந்து மட்டுமே அமைப்பாளர் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது என்றும், ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களை இனசுழற்சி முறையில் பூர்த்தி செய்திட இயலாத நிலையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து தெளிவுரைகள் வழங்குமாறு சமூக நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3)சமூக நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை ஒன்றியத்தில் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களை நிரப்ப இனச்சுழற்சி முறை பின்பற்ற இயலாத நிலையை கருத்தில் கொண்டு இந்நேர்வுக்கு மட்டும் இனச்சுழற்சி முறை பின்பற்றுவதிலிருந்து விலக்கு அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி அரசு பின்வருமாறு தெளிவுரை வழங்குகிறது. ஜவ்வாது மலை ஒன்றியத்தில் தற்போது காலியாக உள்ள 10 (பத்து மட்டும்) சத்துணவு அமைப்பாளர்கள் பணியிடங்களுக்கு அமைப்பாளர்களை நியமனம் செய்ய ஒரு சிறப்பினமாக இனசுழற்சி முறையினை தளர்த்தி நியமனம் செய்ய ஆணையிடப்படுகிறது. இதனால் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினருக்கான பிரதிநிதித்துவத்தில் குறைவு ஏற்படுமானால் அது மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நியமனத்தில் சரிசெய்யப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நா.ச. பழனியப்பன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

1) சமூக நல இயக்குநர்,
   சென்னை – 5
2) மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திருவண்ணாமலை.

நகல்

1) திட்ட ஒருங்கிணைப்பாளர்,
   ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்,
   சென்னை – 113
2) மாநில கணக்காயர்,
   சென்னை – 18
   மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
3) தலைமை தணிக்கையர்,
   அரசுத்துறை தணிக்கையர் அலுவலகம்,
   சென்னை – 2
4) நேர்முக உதவியாளர்,
   அமைச்சர் (சமூக நலம்) அலுவலகம்,
   சென்னை–9.
5) சமூக நலம் 7 பிரிவு
6) இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்